[illegible]

V22. No12. 4.3.50.

JL

[illegible]

M50.2212.

21C424

633

ओं श्री गुरुभ्यो नमः

# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:

Adyam Bhagavatha Ranganathachariar,

KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| Vol. 22 | விரோதி ஸம்வத்ஸரம் பால்குண-மீ | No. 12 |
| புஸ்தகம் 22 | 4—3—50' சனிவாரம் | நே. 12 |

## ஸ்ரீ பகவத் கீதை.

ஸ்ரீ ம. வே. ஆத்யம் பாகவத ரங்கனாதாசாரியார் எழுதியது.

[காப்பிரைட் ரிஜிஸ்டர்.]

3-வது அத்யாயம்.

633/1-50

(முன் 204-ம் பக்கம் தொடர்ச்சி)

आवृतं ज्ञानमेतेन ज्ञानिनोनित्यवैरिणा ॥
कामरूपेण कौन्तेय दुष्पूरेणा नलेनच ॥ ३९ ॥

39 ஆவ்ருதம் க்ஞானமேதேன க்ஞானிநோ நித்யவைரிணா।
காமரூபேண கௌந்தேய துஷ்பூரேணா நலேனச॥

ஹேகௌந்தேய குந்தி புத்ரனை அர்ஜுனா! க்ஞானின: க்ஞானியின் க்ஞானம் சாஸ்திரம் படித்ததால் ஏற்பட்ட க்ஞானம் நித்யவைரிணா எப்போதும் அபகாரம் செய்வதாயும் துஷ்பூரேணா சுலபமாய் பூர்த்திசெய்ய முடியாததாயும் அநலேனச திருப்தி இல்லாததாயும் உள்ள காமம் என்பதால் ஆவ்ருதம் மூடப்பட்டிருக்கிறது.

க்ஞானியின் க்ஞானம் நித்யவைரிணா அநர்த்தங்களை விளைவிப்பதால் எப்போதும் சத்ருவாய் இருப்பதாயும், அல்லது நித்யமான மோக்ஷத்திற்கு, அல்லது அதன் சாதனமான

அபரோக்ஷ க்ஞானத்திற்கு, ப்ரதிபந்தகமாய் இருப்பதாயுமுள்ள மேற்சொன்ன காமத்தால், மூடப்பட்டிருக்கிறது. க்ஞானிகளுடைய க்ஞானம் என்று ஏன் சொல்லப்படவேண்டும்? க்ஞானம் க்ஞானிக்குத்தானே இருக்கும், ஆதலால் க்ஞானம் என்று மட்டில் சொல்லப்பட்டிருக்கலாமே, என்றால் க்ஞானின: அதிக க்ஞானமுள்ளவனுடைய, க்ஞானம் க்ஞானம்கூட காமத்தால் மூடப்பட்டிருக்கிறது, என்றால் சாமானியனுடைய க்ஞானத்தைப் பற்றிச் சொல்வானேன்? என்று பொருள்படும். எல்லோருடைய க்ஞானமும் காமரூபேண இச்சாஸ்வரூபமாகிய அதாவது இச்சை ஆகிய காமத்தால், அல்லது காமமாகிய இந்திரிய விஷயத்தைத்தான் (ஆத்மதத்வத்தை அல்ல) அடையச்செய்யும் காமத்தால், மூடப்பட்டிருக்கிறது. காமம் என்பது க்ஞானி அக்ஞானி இருவர்களுக்குமே நித்யவைரி. அக்ஞானியானவன் விஷயங்களை அனுபவிக்கும் காலத்தில் காமத்தை நண்பனாக நினைத்திருந்து அதனால் துக்கம் ஏற்படவும், காமத்தால் நான் இவ்வாறு துக்கம் அடைந்துவிட்டேனே என்று காமத்தை தனக்கு வைரி என்று நினைக்கிறான். க்ஞானியோ பலிஷ்டமான காமத்தால் அகார்யத்தில் பிரவேசிக்கச் செய்யப்படுகிறான். அதை அனுபவிக்கும் காலத்தில் சுகம் ஏற்பட்டாலும் "ஐயோ! இப்படி காமத்தால, அகார்யத்தில், பிரவிருத்தித்தேனே" என்று துக்கப்படுகிறான். துக்கம் ஏற்பட்டாலோ அவனுடைய துக்கத்தைச் சொல்வானேன்? ஆகவே க்ஞானிக்கும் காமமானது நித்யவைரி ஆகும். அந்தகாமத்திற்கு விஷயங்களை அர்ப்பணம் செய்து, அதை சமாதானம் செய்கிறதுதானே என்றால், மகாசன: என்று பின்னடி சொன்னபடி துஷ்பூரேண எதனாலும் காமம் பூரா திருப்தி செய்யமுடியாதது ஆகும். அல்லது துக்கப்பட்டே பூர்த்திசெய்யகூடியதாய் ஆகும் ஏன் பூர்த்தி செய்யமுடியாது என்றால் அநலேன அலம்—பர்யாப்தி—திருப்தி இல்லாததான, அதனால் அநலம் எனப்படும் அக்னிக்கு ஸமானமான, என்று சொல்லப்பட்டது. அக்னியை ஹவிஸ்போட்டு பூர்த்திசெய்ய முடியாததுபோல், காமத்தை விஷயஸுகத்தால் அனுபவிக்க





விட்டு பூர்த்திசெய்விக்க முடியாது. இஷ்டப்பட்ட விஷயங்கள் கிடைக்காமற்போனால், அக்னியைப்போல் தாபமடைந்தவனாய் யதேச்சமாய் விஷயபோகங்களை அனுபவிப்பதற்காக அகார்யங்களைச் செய்ய அந்த காமம் அவனை பிரவிருத்திக்கச்செய்கிறது. மஹாபாப்மா என்று பின்னடி சொல்லப்பட்டதை அனுசரித்து அக்னியைப்போல் நாசகரம் என்றும் சொல்லப்பட்டதாய் ஆகும். காமம் என்பது நாசகரமானது என்று "விவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசனமாத்மன;| காம: க்ரோதஸ்ததா லோபஸ்தஸ் மாதேதத் த்ரயம் த்யஜேத்" என்று முன்னடி சொல்லப்படுகிறது. அப்பேர்ப்பட்ட காமத்தால் க்ஞானம் மூடப்பட்டதாய் ஆகிறது. அக்ஞானியினுடைய க்ஞானம் ஒருதரம் தடைப்பட்டால் மறுபடியும் உண்டாகாது. க்ஞானிகளுக்கு உண்டாயிருக்கும் க்ஞானம் தடைப்பட்டால், வீரியமிழந்து அபரோக்ஷ க்ஞானத்தை உண்டாக்க ஸாமர்த்தியம் பெற்றதாக ஆவதில்லை. ஆகையால் காமம் என்பது எல்லோருக்குமே சத்ரு. அதனால் அந்த காமத்தை தொலைப்பதில் எல்லோரும் எத்தனிக்கவேண்டியதவசியம். நீ என் அத்தையான குந்தியின் மகனானதால் உன் விஷயத்தில் உதாசீனமாய் இருப்பதற்கில்லை. நான் உபதேசம் செய்கிறேன், கேள், என்று கௌந்தேய என்று அழைத்ததால் சூசிக்கப்பட்டதாய் ஆகும்.

इंद्रियाणि मनोबुद्धिरस्याधिष्ठानमुच्यते ॥
एतैर्विमोहयत्येषः ज्ञानमावृत्यदेहिनं ॥४०॥

40 இந்திரியாணி மனோபுத்திரஸ்யாதிஷ்டானமுச்யதே|
ஏதைர் விமோஹயத்யேஷ: க்ஞானமாவ்ருத்யதேஹினம்||

அஸ்ய இந்த காமமென்னும் சத்ருவுக்கு இந்திரியாணி கண்: காதுமுதலான இந்திரியங்கள், அப்படியே மன: மனஸ், புத்தி' புத்தி, இவைகள் அதிஷ்டானம் இருப்பிடமானவைகள் இதி என்று உச்யதே சொல்லப்படுகிறது ஏஷ: இந்த காமமானது ஏதை: கண்காதுமுதலான இந்திரியங்களால் உண்டான க்ஞானம் க்ஞானத்தை ஆவ்ருத்ய உண்டாகாமற்செய்து தேஹினம் ஜீவனை விமோஹயதி மோகப்படுத்துகிறது.



2104-7

அஸ்ய பிந்திய சுலோகத்தில் சொன்னபடி காமமாகிய சத்ருவுக்கு மனுஷ்யனுடைய பஞ்சக்ஞானேந்திரியம் பஞ்சகர்மேந்திரியம் ஆகிய கண்காது முதலானவைகளும் வாக்பாணி, முதலானவைகளும், ப்ரதான இந்திரியங்களான மனஸ்ஸும் புத்தியும், ஆசிரயமாய் இருப்பிடமானதாய் உள்ளது. க்ஞானேந்திரியங்களின் காரியங்களாலேயும் கர்மேந்திரியங்களின் காரியங்களாலேயும் மனதின் காரியமாகிய ஸங்கல்பத்தாலேயும் மனோரதத்தாலேயும், முடிவுசெய்துகொள்ளுதலாகிய அத்யவஸாயம் எனப்படும் புத்தியின் காரியத்தாலேயும், இந்த காமம் உண்டாகும் என்று அபிப்பிராயம். ஆக இந்திரியங்களும் மனஸ்ஸும் புத்தியும் இந்த காமத்திற்கு ஆசிரயமானவைகள். ஆசிரயமான இந்திரியாதிகளால், அவைகளின் காரியங்களால், ஏற்படும் காமம் உள்ளே ப்ரவேசித்து விவேக க்ஞானத்தை மறைத்து, சரியான க்ஞானத்தை உண்டாக்காமல், எப்படியோ ஏற்பட்ட நல்லறிவையும், காரியம் செய்ய சக்தியற்றதாய்ச் செய்து, சரீரத்தில் அபிமானங்கொண்ட பலவகை ஜீவராசிகளை விசேஷமாய் மோகிக்கிறது. என்றால் ஜீவனை காமம் ஆக்கிரமிக்கிறது. விபரீத க்ஞானத்தை உண்டாக்கி நாசமடையவும் செய்கிறது. மற்றும் அதிஷ்டாதி ஏபி: காம: ஆத்மானம் அதிஷ்டானம் என்றால் உபகரணம் என்று வ்யுத்பத்திசெய்வதால், இந்த இந்திரியாதிகள் வழியாய் அவைகள் சகாயமானவைகளாய் இருந்து, காமம் உள்ளே பிரவேசம் செய்து, க்ஞானத்தை மறைத்து, ஜீவனை மோகிக்கிறது என்றும் சொல்லலாம். ஓர் திருடன் தடையில்லாத வாசல்களின் வழியாய் உள்ளுக்குள் பிரவேசித்து, தன் காரியங்களுக்கு விரோதமாய் இருக்கும் தீபத்தை அணைத்து, ஸர்வஸ்வத்தையும் அபகரித்து, வீட்டின் அபிமானியை ஆக்ரமிப்பதுபோல், இந்திரியங்கள் மனஸ்புத்தி இவைகளின் காரியங்கள் மூலமாய், காமம் உள்ளே பிரவேசித்து க்ஞானத்தை மறைத்து, ஜீவனை ஆக்கிரமிக்கிறது என்று சொன்னதாய் அறியவேண்டியதாகும். காமத்திற்கு அபிமானி காலநேமி என்னும் தைத்யன் "அசுரா: அசுபேஷ்வேவ காமாதேரபிமானின:| ததர காம: காலநேமி." என்கிறது பிரமாணம். (தொடரும்)





## பாலர் ஸ்தோத்திரம்.

(முன் 195ம் பக்கம் தொடர்ச்சி)

210421

42. நலிநீதள, நயனளிக, சிகுராகர லஸித
மணிகுண்டல, முகமண்டல, விதுமண்டல, சமன|
யமுனுதட, புளினுத்புத, மஹிளாஜன, ரமண|
சரணம்பவ, சரணம்பவ சரணம்பவ சரணம்||

43. ஜகதுத்பவ ப்ருதிஸம்ஹ்ருதி முகதாகில விருதி
ரிதமங்கள குணசோபித விதுதாசுப கபில|
பவதாபன மதுஸூதன ஸுகசிஜ்ஜன சரண
கடகோணக கவிரங்கப சரணம்புவ சரணம்||

44. [13] ரங்காதிதேவவபு ரங்காதிமாகலித, பங்கார்த்தி காசகவிபோ
நங்காரிஸேவித புஜங்காரிவாஹனஸு கங்காபவாப்ஜ. சரண|
ப்ருங்காயமான முனிச்ருங்கார்க்ர யவாங்விஹுதச்ருங்காரகேளிநயனு
பாங்காபிராம நிகமாங்கரவ மாஹரி, ஸுதாங்காயதேகிலநுதி:||

45. ப்ரோஷ்டசவிக்ரஹஸு நிஷ்டவனேத்ததவி சிஷ்டாம்புசாரி, ஜலதே
கோஷ்டாந்தராஹிதவி, சேஷ்டாகமௌகபர, மேஷ்டடிதத்வமவமா
ப்ரேஷ்டார்க்கஸுனுமனு. சேஷ்டார்த்தமாத்மவித. திஷ்டோ [ம்|
யுகாந்தஸமயே
ஸ்தேஷ்டாத்ம ச்ருங்கத்ருத. காஷ்டாம்புவாஹனவ. ராஷ்டா
பதப்ரபதனே||

46. கண்டபவத்பஹுளா. டிண்டராஜ்ரும்பணஸுசண்டக்ருதோததிமஹா
காண்டாதிசித்ரகதி சௌண்டாத்ய ஹைமரதபாண்டாப்ரமேயசரித|
சண்டாச்வகண்டமதசுண்டாலதுர்ஹ்ருதய கண்டாபிகண்டகரதோஸ்
சண்டாமரேசஹய துண்டாக்ருதே த்ருசமகுண்டாமலம் ப்ரதிசமே||

47, லாரங்கக்ருத்திதர ஸாரங்கவாரிதர லாரங்க ராஜவரத
ஸாரங்கதாரிதர ஸாரங்கதாத்மமத ஸாரங்க தௌஷதபலம்|
லாரங்கவத்குஸும ஸாரங்கதம்சதவ ஸாரங்கமாங்க்ரியுகளம்
ஸாரங்கவர்ணமப ஸாரங்கதாப்ஜமத ஸாரங்கதிம்ஸ்த்வ மவமாம்||

---

13. அசுவதாடீஸ்துதி.

14
48. ஜடாகடாஹஸம்ப்ரம ப்ரமன்நிலிம்ப நிர்ஜரீ
விலோல வீசிவல்லரீ விராஜமான மூர்த்தனி|
தகத் தகத் திமிஜ்வலல் லலாடபட்ட பாவகே
கிசோர சந்த்ரசேகரே ரதி: ப்ரதிக்ஷணம்மம||

15
49, பணிகணவரபூஷ: பார்வதீச்லாக்யவேஷ:
கலஜன க்ருதரோஷ: கண்டிதாத்மீய தோஷ:|
ஸதருண கிரிவாஸ: சக்ரசூர்யாத்யதீச:
பரிஹ்ருத பவபாச: பாதுமாம் பார்வதீச:|

16
50. அயிகிரி நந்தினி நந்தித மேதினி விச்வவிநோதினி நந்திநுதே
கிரிவர விந்த்ய சிரோதி நிவாஸினி விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணு
நுதே|
பகவதிஹேசிதி கண்ட குடும்பினி பூரிகுடும்பினி பூதிக்ருதே
ஜயஜயஹேமஹி ஷாஸுரமர்த்தினி ரம்யகபர்த்தினி சைலஸுதே||

17
51. பஜலக்ஷ்மீசம் பஜவாணீசம்
பஜதபக்தம் ப்ரௌடமதே|| பல்||
தேஹமிதம் நவ ரந்த்ரஸமேதம
ச்வாஸஸமீர: சித்ரவிநிர்யன்|
தஸ்ய சரீரே ஸ்திதிமாஸ்சர்யாம்
சிந்தய வாணீ ரமணுதினம்|| (பஜ)

52. இந்திரிய கோடா ஸ்தவவச்யா க
ப்ரக்ரஹ பூதம் நாந்தக்கரணம்||
ஸாரதி புத்திர் மதவாதீனு
கஸ்மாத்காய ஸ்தவவ்ச்யஸ்யாத்|| (பஜ)

53. ஆயுர்ஜவனம் நாபி நிரோத்யம்
மணிமந்த்ராப்யா மௌஷதவீர்யை:|
கோடிதனைர்வா பந்துசதைர்வா
ஸ்ரீபதி கருணு மந்தரதோன்யை:|| (பஜ)

14 பஞ்சசாமரஸ்துதி. 15 பரமசிவன், 16 காளிகிதா.
17 நவரத்னமாலிகா (பாட்டு ஆதி)



54. மரணதசாயாம் த்வத்ப்ரியகாந்தா
குருகுரசப்தம் த்வத்கனஜாதம்||
ச்ருத்வோத்வேகாத் தாவதிவேகாத்
பூஷணபேடம் ஸம்ரக்ஷிதும்|| (பஜ)

55. நாவதி சச்சோடிஸ்த்வாம்
ஹேத்வாபாஸோ நகர்மமீமாம்ஸா||
ஸ்ரீபதிரேக ஸ்த்ராதா
ஸம்ஸாரபயாத் ஹனுமதாராத்ய:|| (பஜ)

18
56 ஸ்ரீவர பாலக ரிங்கண தத்பர
பத்மதளாயத லோசன தேவ||
குந்தளஸந்ததி ராஜித ஸன்முக
தேவகிநந்தன கோவிந்தவந்தே||

57. ஹாடக நூபுர சக்வரிபூர்வக
பூஷண பூஷித ச்யாமள தேஹ|
குந்தள ஸந்ததி ராஜித ஸன்முக
தேவகிநந்தன கோவிந்த வந்தே||

58. பௌரட கிங்கிணி ராவவிநூத
நிதாக விதோஷ சிதாநந்த ரூப|
குந்தள ஸந்ததி ராஜித ஸன்முக
தேவகிநந்தன கோவிந்த வந்தே||

59. தேவகிநந்தன நந்தன வந்தித
மத்வ விபீஷண ஸாங்க்ரி ஸரோஜ|
குந்தள ஸந்ததி ராஜித ஸன்முக
தேவகி நந்தன கோவிந்த வந்தே||

60. அத்வய விக்ரம கோவிந்த கிங்கர
ஸ்ரீமத்வ வல்லப குருபரநம்ய|
குந்தள ஸந்ததி ராஜிதஸன்முக
தேவகி நந்தன கோவிந்தவந்தே||

18 க்ருஷ்ணரிங்கண ஸ்துதி (கும்மி மெட்டு, அடதாளம்)

[19]
61. பாஞ்சால்யம்பர கிகரதக்ருஷ்ண
பாண்டவகுலதன தெய்வத க்ருஷ்ண
ஸ்ரீ சுகயமிவர ஸந்நுதக்ருஷ்ண
கோரூபாவனி விதிகத க்ருஷ்ண
தேவகதனயா ஜடாக க்ருஷ்ண
ப்ரம்மபவாப்டா மர்த்தித க்ருஷ்ண
சங்கசக்ரதர பாலக க்ருஷ்ண
பித்ருபதபந்த விமோசன க்ருஷ்ண
நந்தயசோதா நிகடக க்ருஷ்ண
கோபீப்ருந்தா நந்தித க்ருஷ்ண
பதிதபூதனா மாரண க்ருஷ்ண
கடுசகடாஸுர பஞ்ஜக க்ருஷ்ண
காளியபணிபண மர்த்தன க்ருஷ்ண
யமுனாவிஷஜல சோதன க்ருஷ்ண
முரளீதர மதுஸூதன க்ருஷ்ண
சாரதாஜனீ மண்டன க்ருஷ்ண
மந்தஹாஸமுக ஸுந்தர க்ருஷ்ண
ராஸக்ரீடா விஹரண க்ருஷ்ண
மதுராமஹிளா மோஹத க்ருஷ்ண
கம்ஸகரீந்த்ர ம்ருகாதிப க்ருஷ்ண
பைஷ்மீபரிணய கோத்ஸுக க்ருஷ்ண
ப்ரம்மாத்யமர ஸுமார்ச்சித க்ருஷ்ண
கும்பகோண புரவாஸின் க்ருஷ்ண
பாகவதார்ய வரப்ரத க்ருஷ்ண
பாஹிபாஹிபர தெய்வத க்ருஷ்ண
ஜய ஜய மன்மத மன்மத க்ருஷ்ண
[20]
பாஹி பாஹி பரதெய்வத க்ருஷ்ண
ஜய ஜய மன்மத மன்மத க்ருஷ்ண

---

19 க்ருஷ்ணகுணாவளிகீதம் (ரகுபதிராகவ ராஜாராம் மெட்டு)
20 மேல்ஸ்தாயியிலும் பல மெட்டுகளிலும் கோஷிக்கவும்



## ஸ்ரீ கல்யாணிதேவி இயற்றிய
## தாரதம்ய ஸ்தோத்திரம்.

---

(முன் 192-ம் பக்கம் தொடர்ச்சி)

வைவஸ்வதமனு ஏழாவது மன்வந்திரத்திற்கு அதிபதி, ஸ்ராத்ததேவன் என்று சொல்லப்படுவான். விவஸ்வான் என்னும் சூரியனின் பிள்ளை. இக்ஷ்வாகுமுதலானவர்களின் தந்தை. த்ரிகர்த்த தேசாதிபதி ஸத்யவ்ரதர் என்று க்ருஷ்ணாவதார காலத்தில் பிறந்தவர். இவர்கள் எல்லோரும் சாமனர்கள். இவர்களில் வசிஷ்டர் அருந்ததியின் பர்த்தா 18 லக்ஷணங்களை சரீரத்தில் அமைந்தவர்.

**17.** மித்ர: தாரா, நிர்ருதி: ப்ராவஹீ. மித்ர: பன்னிரண்டு சூரியர்களில் இவர் ஒருவர். பிரம்மாவின் ஆவேசங்கொண்டவர். மகாலட்சுமியான ஸ்ரீ ருக்மணிதேவியின் பிதாவான பீஷ்மகராஜனாய் பிறந்தார். அச்சமயம் அவரிடம் ராகுவின் சம்பந்தம் உண்டு. இவர் வருணருடன் சம்பந்தபெற்று மித்ராவருணர் என்று நாமம் பெற்றவர். அச்சமயம் பிரம்மபுத்திரரான வசிஷ்டரும் புலஸ்த்யரின் குமாரருமான அகஸ்தியரும் இவர்களுக்கு பிள்ளைகளாய பிறந்திருக்கின்றனர். இவர் பாயு (மலவாய்) தத்வத்திற்கு அபிமானி தேவதை. சரீரத்தில் 17 லக்ஷணங்களைக் கொண்டவர். தாரா ப்ருஹஸ்பதி ஆசாரியாளின் பாரியாள். சந்திரனால் அவளிடம் புதன் பிறந்தான். அசுவத்தாமாசாரியாரின் தாயாரும் க்ருபாசாரியாரின் தங்கையுமான க்ருபி என்று பிறந்தவள். கௌதமீ என்று அவளுக்கு வேறு பெயர்உண்டு. நிர்ருதி தென்மேற்கு மூலைக்கு அதிபதியான ராக்ஷஸன், இவன் பிரம்மாவின் பாயுவினின்றும்பிறந்தவன். ஏகாதச ருத்திரர்களில் நிர்ருதி யென்பவரின் ஆவேசம்பெற்றவன். ராமாவதாரகாலத்தில் துர்முகனையும் க்ருஷ்ணாவதார காலத்தில் கடோத்கசனையும் ருத்திரனின் ஆவேசம் கொண்டவனாய் பிறந்தவன். திக்பாலகனாய் இருப்பதால் தேவர்களின் தாரதம்யத்தில் சேர்ந்தவன். ப்ராவஹீ

ப்ரதான வாயுவான முக்ய ப்ராணரின் குமாரரான ப்ரவஹவாயுவின் பாரியாள் இவள். ஆகிய இந்த நால்வர்களும் சமானமாய் இருப்பவர்கள் இவர்கள் விசுவாமித்ராதிகளுக்கு குறைந்தவர்கள்.

3 விஷ்வக்ஸேனேச்வி னௌதேள கணபதிதனபா
உக்தசேஷா: சதஸ்தா:
தேவா ஸ்சோக்தேதரான்யே ததவரமனவ
ஸ்சாவனேசத்ய ஸம்க்ஞௌ।
வைன்யோய: கார்த்தவீர்ய: க்ஷிதிபதி சசபிந்
து. ப்ரியாதிவ்ரதோதோ
கங்காபர்ஜன்யஸம்க்ஞே சசியமதயிதே
மாவிராட் சாசு பாந்து ॥

(பதச்சேதம்) விஷ்வக்ஸேனேச்விநௌ, தௌ, கணபதி தனபா:, உக்தசேஷா: சதஸ்தா: தேவா:, ச, உக்தேதரா:, அன்யே, ததவரமனவ:, சாவனேசத்ய ஸம்க்ஞௌ, வைன்ய:, ய:, கார்த்தவீர்ய:, க்ஷிதிபதி சசபிந்து., ப்ரியாதிவ்ரத:, அதோ, கங்கா பர்ஜன்ய ஸம்க்ஞே, சசியமதயிதே, மா, விராட், ச, ஆசு, பாந்து.

18 விஷ்வக்ஸேன: அச்விநௌ, கணபதி:, தனப:; உக்தசேஷா: சதஸ்தா: உக்தேதரா: அன்யே தேவா:

மேற்கண்டவர்களுக்கு குறைந்தவர்கள் யாரெனில் விஷ்வக்ஸேனர் இவர் ப்ரதான வாயுபகவானின் குமாரர். மகாவிஷ்ணுவின் பார்ஷதர்களில் சேர்ந்தவர். அசுவினிதேவர்கள் இவர்கள் இருவர்கள். நாஸத்யன், தஸ்ரன் என்னும் பெயர்கொண்டவர்கள். குதிரை ரூபங்கொண்ட ஸம்க்ஞாதேவியிடம் அவளுடைய பர்த்தாவான சூரியனால் பிறந்தவர்கள். தேவர்களுக்கு வைத்யம் செய்பவர்கள். ராமாவதார காலத்தில மைந்தன த்விவிதன் என்று இரண்டு வானரர்களாகவும், கிருஷ்ணவதாரகாலத்தில நகுலன், ஸகதேவனாகவும், பிறந்தவர்கள், இந்திரபட்டம் ஆண்டவர்கள் கணபதி: விக்னேசுவரர். பரமசிவனால் பார்வதியிடம் பிறந்தவர். ஆகாசதத்வத்திற்கு அபிமானி. சரீரத்தில் 16 லக்ஷணங்களைக் கொண்டவர். மகாபாரதம் எழுதியவர்.

(தொடரும்)



## செய்திகள்.

புதுடெல்லியில் ஸ்ரீ மத்வநவமி மகோற்சவம் அவ்வூர் ஸ்ரீ மத்வசபாவின் ஆதரவின்கீழ் 27—1—50உயன்று, காலையில் ஸர்வமூல கிரந்தங்கள், வேதம், மத்வவிஜயம் பாராயணம், மத்யானம் ஆராதனை, பிராம்மணபோஜனம், மாலையில் பெருந்துறை ஸ்ரீ பீமாசார்ய ஸ்ரீ மத்வாசாரியாரின் மகத்வம் அன்னாரின் கிரந்தங்களின் மேன்மை இவைகளைப்பற்றி உபன்யாஸம், இவைகளுடன் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டதென்றும் இவ்வருஷம் இதில் அநேக ஸ்மார்த்தர்களும் பங்கெடுத்துக்கொண்டனரென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வில்லிவாக்கத்தில் இருக்கும் மாத்வ மகாஜனங்கள் 26—1—50 உயன்று பத்மவிலாஸத்தில் மத்வ நவமி உற்சவத்தை விசேஷமாய் கொண்டாடி அங்கு மாத்வ சங்கத்தை ஸ்தாபித்தனர் என்று காரியதரிசி ஸ்ரீ C. நரசிங்கராவ் அறிவிக்கிறார்.

ஆம்பூர் துத்திப்பட்டில் மத்வநவமி 27—1—50உயன்று வழக்கபபடி ஆஞ்சனேயர்களுக்கு அபிஷேகம், மாலையில் பஜனை, ஸ்ரீ M. V. ராமராயரால் ஸ்ரீ மத்வாசாரியாரைப்பற்றி உபன்யாஸம், மங்களாரத்தி முதலானவைகளுடன் நடைபெற்றதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மதராஸ் புரசவாக்கத்தில் மாடர்ன கபேயின் புரொப்ரைட்டர் ஸ்ரீ K. சீதாராம ராவின் தாஸ ப்ராஸாதா என்னும் கிரகத்தில் வழக்கப்படி ஸ்ரீ மத்வநவமி கொண்டாட்டம் 18—1—50 முதல் 28—1—50 வரையில் பற்பல விஷயங்களில் அநேக பண்டிதர்களின் உபன்யாஸங்கள், மத்வநவமியன்று விசேஷ பிராம்மணபோஜனம், வித்வத் சம்பாவனைகள், வித்யார்த்தி பரிசுகள், ஊர்வலம் முதலானவைகளுடன் வெகு சிறப்பாய் நடைபெற்றதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ராமநாதபுரம் ஜில்லா வத்திராயிருப்பு தலைகாணித்தெருவில் 72உயன்று இவ்வூர் மாத்வர்களால் மத்வநவமி ஆஞ்ஜனேயருக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் சுமார் 400 பேருக்கு பிராம்மண

போஜனம் அலங்காரபந்தி முதலானவைகளுடன் ஸ்ரீமான்களான டீசர் நரசிங்காரவ், சங்கராவ் இவர்களின் முயற்சியால் நடைபெற்றதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பண்ருட்டிக்கடுத்த சிறு கிராமத்தில் மத்வநவமி ஆராதனை மூன்று நாட்களும் அலங்காரபந்தி, நூற்றுக்கணக்கானவர்களுக்கு பிராம்மணபோஜனம், வெளியூர்களிலிருந்து வரவழைக்கப்பட்ட அநேக பிரஸித்த வித்வான்களைக்கொண்டு உபன்யாஸங்கள், ஸ்ரீ மத்வபடத்திற்கு ஊர்வலம். பங்களூர் கதாரத்னம் ஸ்ரீ கிருஷ்ணபாகவதரால் ஹரிகதை இவைகளுடன் விசேஷமாய் நடந்ததை அறிவிக்க சந்தோஷப்படுகிறோம்.

## ஓர் உபன்யாஸம்.

இம் மித்திரன் ஆசிரியர் ஸ்ரீயான் ஆத்யம் பாகவத ரங்கனாதாசாரியார் சிறு கிராமத்தில் நடந்த மத்வநவமி உற்சவத்தில் செய்த உபன்யாஸத்தின் ஸாராம்சமாவது :—

ஜீவன், ஜடன், ஈசுவரன். என்று உலகில் மூன்றுவகையார்கள் உண்டு. இவர்களில் துக்கம் என்பது ஜீவனுக்குத்தான். ஜீவனின் துக்கநிவிருத்திக்காக வேதங்கள் பிரவிருத்தித்து இருக்கின்றன. சுருதிகளின் அர்த்தம் இன்னதென்று நிர்ணயித்துக்கொடுக்க பகவானின் அவதாரமான ஸ்ரீ வேதவியாஸர் பிரம்ம ஸூத்திரங்களை இயற்றினார். அவைகளுக்கு பாஷியங்களை இயற்றி 21 மதங்கள் கிளம்பின. அவைகளை எல்லாம் கண்டித்து கிளம்பிய மதம் 22வது பாஷியமுள்ள மதமாகிய ஸ்ரீமத்வ மதம். மத்வமதத்தின் மேன்மையை நாம் சுலபமாய் ஊகிக்கலாம். எல்லா மதாசாரியார்களைப்போலவேதான் இம் மத்வாசாரியாரும் என்று சாமானிய கல்விபடைத்தவர்கள் கூறிபேசலாம். ஸ்ரீ மத்வாசாரியார் சொன்னது, அடிப்படையான சுருதிகளின் நோக்கமான ஜீவன்களின் துக்கத்தை உண்மையில் போக்ககூடியதா? அல்லது இதர மதாசாரியார்கள் சொன்னது அப்பேர்ப்பட்டதா? என்று அறிவாளிகள் விமரிசை செய்து பார்க்கவேண்டும். மதாசாரியார்களில் முக்யஸ்தர்கள் என நமது தென்னாட்டில் பிரசித்தமானவர்கள் ஸ்ரீ சங்கராசாரியார், ஸ்ரீ ராமானுஜாசாரியார், ஸ்ரீ மத்வாசாரியார் ஆகிய மூவர்கள்தான். சங்கராசாரியார் ஜீவன்களை சுகம் அடைய அத்வைத உபாஸனையைச் செய்ய உபதேசம் செய்திருக்கிறார். நான் வேறு அல்ல. ஈசுவரன் வேறு அல்ல, பரபிரம்மம் நானே, பிரம்மத்தைத் தவிர உலகில் வேறு பதார்த்தமே இல்லை, உலகமே பொய், மாயை, ஜாதிவர்ணாசிரம தர்மங்கள் எல்லாம் மோக்ஷத்தை விரும்புபவனுக்கு வேண்டாம், அவைகள் எல்லாம் பொய், என்று ஒன்றேகால் லக்ஷம் கிரந்தங்களுள்ள ஏராளமான நூல்களை இயற்றி, உலகத்தாருக்கு அறிவித்தார். இது நாஸ்திகவாதம் அல்லவா? விவேகிகள் யோசித்துப் பார்க்கலாம். பெயரளவில் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று சொல்லிவிட்டு, அந்த கடவுள் நாம் எப்படியும் சொல்லமுடியாது. எண்ணவும் முடியாது, உபாஸிக்கவும் முடியாது, அவர் எதையும் செய்ய முடியாதவர், அவர் கைகால் முதலியவை இல்லாதவர், உருவம் இல்லாதவர், குணங்கள் இல்லாதவர், வேதத்தாலும் அறியப்படமுடியாதவர், எந்த விதமான யோக்யதையும் இல்லாதவர் என்று பட்டவர்த்தனமாக நமது கடவுள் எனப்படும் பிரம்மத்தை நிந்திக்கிறார், என்றால் இந்த மதாசாரியார் ஸாது ஜனங்களால் மதிக்கப்படுவாரா என்று சாவதானமாய் யோசியுங்கள். சங்கராசாரியாரின் விஷயம் இப்படி ஆயிற்று. ராமானுஜாசாரியாரோ கடவுளை வேறாகச்சொல்லாமல ஜகத்துடன் இணைத்து விட்டு சிதசித்தின் விசிஷ்டத்திற்கேதான் மதிப்பையும் யோக்யதையையும் அளித்துவிட்டார். பகவானும் அவருடைய பாரியாளும் சேர்ந்துதான் கடவுள் எனக் கூறிவிட்டார். எமது ஆசாரியாளான மத்வாசாரியாரோ, பகவான் ஒருவருக்கே எல்லாவறறையும் விட, லக்ஷ்மீ, பிரம்மா, சிவன், ஸ்கந்தன் முதலான எல்லா தேவர்களையும்விட, ஸர்வோத்தம பதவியை அளித்தார். அவர் எல்லாம்செய்யவல்லவர் என்றார். அவரால் சிருஷ்டிக்கப்பட்டது இந்த உலகம், இந்திரஜாலம்போல பொய் ஏன் ஆகவேண்டும், ஸர்வசக்தன் செய்யும் காரியம் வீணாகுமா என்று சாதித்தார். அந்த ஸர்வேசுவரனுக்கு இந்த ஜீவன்கள் எத்தனையோ மடங்கு குறைந்தவர்கள் என்றார். ஜீவன்களிலும் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்று தாரதம்யம் உண்டு என்றார். அப்படியே உலகில் இவர், அவர், இது, அது, என்று எல்லாவகை பேதங்

களும் உண்டு என்றார். யோசித்துப்பாருங்கள், வேறு பேதமே இல்லை, எல்லாம் ஒன்று என்று அத்வைதம் பேசுவது ஆதாரம் இல்லாத வெறும் பொறுப்பில்லாத பேச்சு; இதற்கு பிரமாணமே இல்லை இருந்தால் ஒன்றையாவது காட்டுங்கள் என்று ஸ்ரீ மத்வாசாரியார் சவால்விடுத்தார். அத்வைத உபாஸனையை செய்து இதுவரையில் ஒருவருமே மோக்ஷம் அடைந்ததில்லை. அவ்வாறு அடைந்தாய் அத்வைதிகளும் ஒப்புக்கொள்வதில்லை. ஸ்ரீமத்வாசாரியார் செய்த உபதேசத்தின்படி உபாஸனைசெய்து கோடானுகோடி பக்தர்கள் மோக்ஷம் அடைந்திருக்கின்றனர். அதற்கு அத்தாக்ஷி நாம் சிரமப்பட்டு தேடவேண்டியதில்லை. பாரதம் பாகவதம் முதலான எண்ணிறந்தபுராணங்கள் ஸ்ரீ மத்வாசாரியார் சொல்வதைத்தான் அறிவிக்கின்றன. பகவத்பக்தர்கள் எல்லாரும் சொல்லி வந்ததைத்தான் ஸ்ரீ மத்வாசாரியார் சொல்லியுள்ளார். மனுமாந்தாதாதிகள் பல்லாயிர வருஷக்கணக்காய் அனுஷ்டித்துவந்ததைத்தான் ஸ்ரீ மத்வாசாரியார் அனுஷ்டிக்கும்படி வற்புறுத்தி இருக்கிறார். அவர்கள் ஸர்வோத்தமவஸ்துவாய் அறிவித்திருக்கும் ஸ்ரீ மகாவிஷ்ணுவைத்தான் பர பிரம்மம் என்றும் பிரம்மஸூத்திரங்களால் நிர்ணயம் செய்துகொடுக்கப் பட்டது என்றும் தனது பாஷ்யங்களில் நிரூபித்துள்ளார். அந்த மகாவிஷ்ணுவைததான் நாம் துக்கநிவிருத்திக்காக உபாஸிக்கவேண்டும் என்று பரமதகண்டன பூர்வமாய் ஸ்வமதத்தை ஸ்தாபனம் செய்த ஸ்ரீ மத்வாசாரியாரின் மேன்மையை விவேகிகள் யாரும் ஒப்புக்கொள்ளவேண்டியதே ஆகும்.

## ஸ்ரீ உத்தராதிமடம் ஸ்வாமிகள் கும்பகோணம் விஜயம்.

---

தற்போது ஸ்ரீ உத்தராதிமடம் ஸம்ஸ்தானாதிபதியான சுமார் 28-வயதுள்ள ஸ்ரீ ஸத்யப்ரமோததீர்த்த ஸ்வாமிகள் 5—2—1950 பானுவாரத்தன்று, ஸ்ரீ நாச்சியார்கோவிலில் ஸ்ரீ ஸத்யாபிநவதீர்த்தஸ்வாமிகளை தரிசித்துவிட்டு, மாலையில் மேனாவில் ஏறிக்கொண்டு நமது நகர் செட்டியார் அக்கிரகாரம் மண்டபம் வந்துசேர்ந்தார். அவருக்கு வரவேற்பு அளிக்க



விசேஷமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மூன்று யானைகளும் ஏராளமான சத்ரசாமராதி ஸ்தோமங்களும் விசேஷமான காஸ்லைட்டு வெளிச்சமும் ஆயிரக்கணக்கான ஜனங்களும் சேர்க்கப்பட்டிருந்தன. ஓர் பெரிய யானையின் மீது புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய அம்பாரியின் மீது, ஸ்ரீ ஸ்வாமிகள் அமர்த்தப்பட்டு, வாத்ய கோஷங்களுடனும், இத்தனை விசேஷ மரியாதைகளுடனும், ஊர்வலம் மெதுவாகக் கிளம்பி, மாத்வர்களின் பிரதான தெருக்களின் வழியாக நடத்தப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிகள் யானையின்மீது இருந்தே ஆங்காங்கு ஏழைமக்களுக்காக, முழு ரூபாய்கள் விசேஷமாய் கலந்திருந்த ஏராளமான நாணயங்களை வெள்ளித் தட்டுகளிலிருந்து இரு கைகளாலும் வாரிவாரி ஆங்காங்கு இறைத்து வந்தார். இம்மாதிரி எந்த ஸ்வாமிகளும் இவ்வூரில் செய்ததில்லை. நமது நகருக்குள் பிரவேசிக்கும்போதே இந்த ஸ்வாமிகள் பொதுமக்களின் பெரும் மதிப்பைப் பெற்றார். யானையின்மீது உட்கார்ந்து ஊர்வலம் செல்லும் மரியாதை, மாத்வ மடாதிபதிகளில் உத்தராதி மடம் ஸ்வாமிகளுக்குத்தான் உண்டு ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி மடம் ஸ்வாமிகள் ஸ்வாமி பெட்டியுடன் பல்லக்கிலேறி, பட்டணப்ரவேசம் செய்வதும், ஸ்ரீ வியாஸராஜமடத்தார், ஒட்டகையின்மீது பச்சைக்கொடியை பரக்கவிட்டுக்கொண்டு, கத்தி துப்பாக்கி ஏந்திய சிப்பாய்களுடன் மேனாவில் ஏறி பட்டணப்ரவேசம் செய்வதும், பிரசித்தமே. ராமேசவரம், ஸ்ரீமுஷ்ணம் முதலான இடங்களில் அங்குள்ள மூர்த்திகளை பூஜிக்கும் மரியாதை ஸ்ரீ மத்வாசாரியாருக்கு இருந்தது, உத்தராதி மடத்தாருக்குத்தான் பரம்பரையாய் இருந்துவருவதுபோல், ஸ்ரீ மத்வாசாரியாரின் ப்ரசிஷ்யரான ஸ்ரீ ஜயதீர்த்தருக்கு, விஜயநகரம் சக்ரவர்த்தியின் ப்ரதான மந்திரியாக இருந்த சிருங்கேரி மடாதிபதி ஸ்ரீ வித்யாரண்யர், அன்னாரின் கல்வித்திறத்தை மெச்சி, தன் அரசனின் பட்டத்து யானையின்மீது அவரை உட்கார்த்திவைத்து, தன் ராஜவீதிகளின் வழியாய் ஊர்வலம் நடத்திக்காட்டிய அரசாங்கத்து மரியாதை, ஸ்ரீ ஜயதீர்த்தரின் நேரான பரம்பரை மடமான ஸ்ரீ உத்தராதி மடத்தா

ருக்கு இருந்துவருவதாய் சொல்லப்படுகிறது. இந்த ஸ்வாமிகள், உத்தராதி மடத்து சிஷ்யர்கள் ஸ்வேச்சையாய் எந்த நிர்பந்தமன்னியில் அளித்த காணிக்கைகளைப் பெற்று, அவர்களுக்கு முத்திராதாரணம் செய்வித்தது சந்தோஷிக்கத்தக்கது. அதைவிட மஹத்சந்தோஷகரமானது, மாத்வ பொதுமக்களுக்கு ஸ்ரீ மத்வமத க்ஞானத்தைப் புகட்ட, அவர் அடிக்கடி அரிய உபன்யாஸங்களைச் செய்வது. இவர் பண்டிதர்களும் கொண்டாடக்கூடிய கல்விபடைத்து, நல்ல வாக்குவண்மை கொண்டவரானதால், இவருடைய உபன்யாஸங்கள் மாத்வ உலகத்தாருக்கு மஹத்தான உபயோகத்தைத்தரகூடியது. அவர் சஞ்சார கிரமத்தில் போகும் ஊர்களிலுள்ள மாத்வ பொதுஜனங்கள் ஸ்ரீ ஸ்வாமிகளை, நிர்பந்தித்தாவது, சொற்ப கால அளவிலாவது, மத்வமத விஷயமாய் உபன்யாஸம் செய்யும்படிச்சொல்லி, அதைக்கேட்டு மதக்கல்வியை விருத்தி செய்துகொள்ள நாம் வற்புறுத்துகிறோம். மாத்வமித்திரனில் அவ்வாறு வற்புறுத்தும்படி சொல்லியிருப்பதாய் ஒரு சிறுபான்மையோரும் அறிவித்தால், இந்த ஸ்வாமிகள் கிரமம் பாராமல் உபன்யாஸம் செய்வார்கள் என்பது எமது துணிபு.

ஸ்ரீ மத்வாசாரியாரின் ப்ரதிஷ்டை:—இம் மித்திரன் பத்திராதிபர் காரியதரிசியாய் இருந்து, பலவருஷங்கள் நூற்றுக்கணக்கான உபன்யாஸங்களை எண்ணிறைந்த பண்டிதர்களால் செய்வித்து, வெகு பிரபலமாய் நடந்துவந்த, கும்பகோணம் மாத்வசபையின் ஆதரவில், பஞ்சலோகத்தில் தயாரிக்கப்பட்டிருந்த ஸ்ரீமத்வாசாரியாரின் பெரியதொரு ஸுந்தரவிக்ரஹம், பிரதிதினம் பூஜைநைவேத்யமில்லாமல், அன்ய ஸ்வாதீனமாய் கிடந்ததை, இப் பத்திராதிபரின் பிரார்த்தனையின்பேரில் ஸ்ரீ ஸ்வாமிகள் வரவழைத்து, உத்தராதிமடத்தில் ஸ்தாபித்து தினம் தவராமல் பூஜைநைவேத்யாதிகளைச் செய்ய ஏற்பாடு செய்தார். இப் பத்திராதிபர் கேட்டால் அந்த விக்ரஹத்தை ஸ்ரீ மத்வ நவமி முதலான புண்யதினங்களில் ஊர்வலம் நடத்தக் கொடுக்கும்படி அதிகாரிகளுக்கு அனுமதியிட்டார். ஸ்ரீ மத்வாசாரியாரை பிரதிஷ்டைசெய்த உத்திராதிமடத்தின் அந்த மண்ட



பத்தில் பாட ப்ரவசனங்கள் உபன்யாஸங்கள் பஜனைமுதலானவைகள் அடிக்கடி நடைபெறச் செய்ய இப் பத்திராதிபருக்கு ஆக்ஞையிட்டார். அவருடைய பிரார்த்தனையின்படி இம் மடத்தில் ஸ்ரீ ஸத்யத்யான தீர்த்தஸ்வாமிகளின் பிருந்தாவன ப்ரதிஷ்டை செய்ய பூர்வாங்கமாய், இம் மடத்தில் ஜனங்களை ஆகர்ஷிக்கும் பொதுவான ஸத்காரியங்கள் நடைபெறச் செய்வதுதான் என்றும் ஸ்ரீ ஸ்வாமிகள் வாக்களித்தார்.

வாக்யார்த்தவிசாரம் ஸ்ரீ ஸத்யத்யான தீர்த்தரைப்போலவே இந்த ஸ்வாமிகள் அத்வைதிகளுடன் தாராளமாய் வாக்யார்த்த விசாரம் செய்து ஸ்ரீ மத்வமதத்தின் மேன்மையை நிரூபித்து வருகிறார். தற்போது மதராஸில் இருக்கும் ஸ்ரீமான் தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள், முன் மதுரையில் ஸ்ரீ ஸத்யத்யான தீர்த்தஸ்வாமிகளுடன் பேசி, அத்வைதத்தை ஸ்தாபிக்க இயலாதுபோனதை விருத்தமாக மாற்றி, தான் ஸ்ரீ ஸத்யத்யான தீர்த்தரை வென்றதாய் பிரசாரம் செய்வதாயும். அவர் இந்நகருக்கு வேறு கார்யமாக வந்திருப்பதாயும், அறிவிக்க, ஸ்ரீ ஸ்வாமிகள் இப் பத்திராதிபரையும் மற்றும் சிலரையும் அவரிடம் அனுப்பி அவரை தம்மடத்திற்கு வரவழைத்து. அவருடன் 'சாஸ்திர விசாரம் செய்தார். சாஸ்திரிகள் “ஓம் அதாதோ பிரம்ம ஜிக்ஞாஸா” என்ற பிரம்மசூத்திரத்துக்கு அர்த்தம் சொல்லும்பொழுது, ஜிக்ஞாஸா என்பதில் க்ஞா என்னும் தாதுவிற்கு க்ஞானம் அர்த்தம் என்றும் ஸன் என்னும் அங்குள்ள ப்ரத்யயத்திற்கு இச்சை அர்த்தம் என்றும், ஆயினும் லக்ஷணையால் விசாரம் அர்த்தம் என்றும் அதனால் பிரம்ம ஜிக்ஞாஸா என்பதற்கு பிரம்மவிசாரமானது செய்யத்தகுந்தது என்று அர்த்தம் ஏற்படுகிறதென்றும், விசாரம் என்றாலோ மனனம் அர்த்தம் என்றும் சொல்லிக்கொண்டு வந்தார். ஸ்ரீ ஸ்வாமிகள் குறுக்கிட்டு மனனம் செய்யவேண்டும் என்று சொன்னால், மனனம் என்பது க்ஞானரூபமானதால் அதற்கு கர்த்தவ்யத்வம் அதாவது க்ஞானம் செய்யவேண்டும் என்பது பொருந்தாதே என்று கேட்டார்கள். அதற்கு சாஸ்திரிகள், மனனம் என்பதும், உபாஸனை என்பதும், விசாரம் என்பதும், வெவ்வேறு

பதார்த்தம் என்றும், விசாரம் என்றால் ஊஹாபோகத்தால் ஏற்படும் நிர்ணயம் என்றும், அது செய்யத்தகுந்தது என்று அதற்கு கர்த்ருத்வம் பொருந்தும் என்றார். உடனே ஸ்வாமிகள் அப்படியானால், நிர்ணயம் என்பதும் க்ஞானரூபம்தானே பிறகு க்ஞானத்திற்கு கர்த்தவ்யத்வம் பொருந்தாதேமுன் சொன்ன ஆக்ஷேபம்தானே அப்படியே நிற்கிறது என்று கேட்டார்கள். சாஸ்திரிகள் அதற்கு பதில்மேலே சொல்லமுடியாமல், லௌகிகத்தில் இறங்கி, இது வாதம் அல்ல, வாதம் செய்வதாய் இருந்தால் அதற்கு ஒரு காலத்தை ஏற்படுத்துங்கள், மத்யஸ்தர்கள் ஏற்படுத்துங்கள், நான் வாதம் செய்யத் தயார் என்றார். அப்படியானால் இப்போதே வாதம் நடக்கட்டும், நீங்கள் அழைத்துவந்திருக்கும் ஸ்மார்த்தர்களின் இப்பெருங்கூட்டத்தாரே மத்யஸ்தர்கள், நான் ஒப்புக்கொள்கிறேன் என்றார். அதற்கு சாஸ்திரிகள் இவர்கள் என்ன அறிவார்கள், நான் ஊருக்குப்போகவேண்டும், பிறகு ஆகட்டும் என்றார். இப்படித்தான். ஸ்ரீ ஸத்யத்யானதீர்த்தருடன் வாதம் செய்ய ஆரம்பித்து நடுவில் எழுந்து சாவகாசமில்லை என்று சொல்லிப்போனார் இவர் என்று இப் பத்திராதிபர் சொல்லவும், என்னை இவர்கள் வேண்டுமென சண்டைக்கு அழைத்திருக்கிறார்கள் என்று சாஸ்திரிகள் சொன்னார். வித்வான்கள் சாஸ்திரத்தில் வாதம் செய்வது சண்டை ஆகுமா, இது பண்டிதர்களின் பேச்சு ஆகாதே, என்று ஸ்ரீமான்களான மைசூர் யக்ஞவிட்டலாசாரியார், திருவாதி விஜயீந்திராசாரியார் முதலான மாத்வ பண்டிதர்கள் பேசவும், இந்த பண்டிதச்ரேஷ்டர்களின் நடுவில் நான் எம்மாத்திரம், நான் வராகன் தாழ்ந்தவன், எனக்கு ஸ்வாமிகளிடமிருந்து மந்திராக்ஷதை கிடைத்தால் சிரஸ்ஸில் தரித்துப் போகிறேன் என்று பேசவும் ஸ்ரீ ஸ்வாமிகள் அவருக்கு வித்வத் சம்பாவனையுடன் மந்திராக்ஷதைகளை அளித்தார். இவர் கேவலம் புராணபட்டர். சாஸ்திரவிசாரம் செய்ய இயலாதவர். என்று வடதேசத்தார் தாராளமாய்பேசினர். அத்வைத பண்டிதர்கள் எல்லோருமே இப்படித்தான் வாதம் செய்து படாடோபம் செய்வது இம் மித்திரனில் முன்பு அறிவிக்கப்பட்டதே ஆகும்.



## எமது விக்ஞாபனம்.

ஸ்ரீ குரு ராகவேந்திரரின் கிருபையால் எமது மாத்வ மித்திரன் தனது 22-வது வருஷத்தையும் முடித்துக்கொண்டு. அடுத்த இதழ்முதல் 23வது வருஷத்தை ஆரம்பித்துக்கொள்கிறது. திரவிய பலமே இல்லாததாயும் கேவலம் சந்தாதொகை பலத்தின்பேரிலேயே நடப்பதாயும் அந்த பலம் ஏற்பட சந்தாதாரர்களின் சங்கியையும் சொற்பமே இருப்பதாயுமுள்ள இந்த மாத்வமித்திரன், இந்த இருபத்தி இரண்டு வருஷகாலமும் எந்த மாதத்திலும் விச்சித்தி ஏற்படாமல் ஏகப்ரகாரமாய் நடந்துவருகிறதென்றால், அதற்கு காரணம் தெய்வானுக்ரஹம் என்று சொல்லாமல் வேறு எதைச் சொல்லலாம். அவ்வாறு தெய்வபலமுள்ள இந்த மாத்வமித்திரனுக்கு 25வருஷம் பூர்த்தியாகுமளவிலாவது எமது சந்தாதாரர்கள் ஆதரவு அளிப்பது ஸ்ரீ குரு ராகவேந்திரரின் ஸங்கல்பத்தை பூர்த்திசெய்விக்கும் அன்னாருடைய ஸேவா பாக்யம் என எமது சந்தாதார நேயர்களை உறுதிகொள்ளும்படி கோருகிறோம். ஸில்வர் ஜூபிலி பதிப்பு வெளியிட மாத்வ மகாபண்டிதர்களின் ஒத்துழைப்பு ஏற்படச்செய்ய, மாத்வமித்திரனிடம் உற்சாகம் காட்டும் ஸ்ரீ உத்தராதிமடம் ஸ்வாமிகளிடம் அணுகப்பட்டிருக்கிறது. ஸ்ரீ மத்வரமணரான பகவான்தான் எல்லோரையும் ஒத்துழைக்கும்படி ப்ரேரிக்கவேண்டும். எமது சந்தாதாரர்கள் இந்த 23வது வால்யத்துக்கு வழக்கப்படி வருடசந்தா ரூ. மூன்றை அனுப்பியதோடு நில்லாமல், ஜூபிலி பதிப்புக்கு அதிகப்படியான நன்கொடைகளையும் யோசனைகளையும் தயவு செய்து அனுப்பிவைக்கவேண்டுகிறோம். தற்போது இந்த தொகைகளை முன்னடி மணியார்டர் மூலமாய் அனுப்பிவைக்காத சந்தாதாரர்களுக்கு 23வது வால்யத்தின் 1 நெ. சஞ்சிகை சந்தாதொகைக்கு வி. பி. மூலமாய் அனுப்பப்படும். அதைப் பெறாமல்போய் எமக்கு நஷ்டத்தை உண்டாக்காமல், வி பி யைப் பெற்று அவர்கள் ஆதரிக்கவேண்டுகிறோம். சந்தாதாரர்களின் அனுகூலமான சமயத்தில் வி. பி. வரும் என்று சொல்ல முடியாததாலால் தற்போதே முன்னடியே சந்தாதொகை முதலானவைகளை எமக்கு அனுப்பிவிட வேண்டுகிறோம். ஸ்ரீ குரு ராகவேந்திரரின் பாதமே துணை.

பத்திராதிபர்.

## விற்பனைக்கு தயார்.

1. ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் அதி அற்புத ஜீவிய சரித்திரம் மஹோஹுமான 2 வது பதிப்பு மற்றும் பல மாகாத்மியங்களும் அழகிய படமும் சேர்க்கப்பட்டது ஸ்ரீ ராகவேந்திர ஸ்தோத்ரம் தமிழில் அர்த்தத்துடன் அடங்கியது விலை ரூ. இரண்டு தபாற்கூலி அணா ஒன்று.

2. ஸ்ரீ புரந்தரதாஸர் இயற்றிய மானஸ பூஜை. ஸ்ரீ வாதிராஜர் இயற்றிய கன்னட வாயு ஸ்துதி. பஞ்சபேதம் தாரதம்ய விவரம், ஸ்ரீ வியாஸராஜர் இயற்றிய கன்னட பகவத்கீதா ஸங்கிரஹம் முதலான 34ஸ்தோத்திரங்கள் அடங்கிய வெகு அபூர்வமான நூல். விலை அணா எட்டுதான் தபாற்கூலி அணாஒன்று.

3. மாத்வமித்திரன் காலண்டர் பிரதி 1-க்கு விலை அணா ஆறு. தபால்சிலவு அணா ஒன்று. இப் பத்திரிகை காரியாலயத்திலும் மதராஸ் திருவல்லிக்கேணி, வெங்கடாசல நாயக்கன் தெரு 8-ம் நெம்பர் வீடு மாடியில், ஸ்ரீ P S கிருஷ்ணராவிடமும் கிடைக்கும். ஆர்டர் செய்ய முந்தவேண்டும்.

## விசேஷ தினங்கள்

7—3—50 மங்களவாரம் ஸ்ரீ வாதிராஜர் புண்யதினம்.
8—3—50 புதவாரம் ஸ்ரீ வியாஸராஜர் ,,
14—3—50 மங்களவாரம் ஏகாதசி உபவாஸம்.
15—3—50 புதவாரம் இன்றும்எல்லா மடத்தாருக்கும் ஸம்பிரதாயத்தாருக்கும் உபவாஸம் உண்டு சிரவண த்வாதசி. சிரவண உப. விஷ்ணுப. உப
16—3—50 குருவாரம் அனைவருக்கும் த்வாதசிபாரணை
18—3—50 சனிவாரம் தர்சம். திலதர்ப்பணம். விஷ்ணுப. உப.
19—3—50 பானுவாரம் ஸ்ரீ விக்ருதி ஸம்வத்ஸரம் ஆரம்பம் யுகாதி பண்டிகை.
27—3—50 சோமவாரம் ஸ்ரீராமநவமி. ஸ்ரீ ஸத்யத்யான தீர்த்தர் புண்யதினம்
30—3—50 குருவாரம் ஏகாதசி உபவாஸம்.
31—3—50 சுக்ரவாரம் த்வாதசி பாரணை ஸாதனி காலை 6 31க்குள்
2—4—50 பானுவாரம் பௌர்ணமி. விஷ்ணுப உப சந்திரகிரஹணம் ஸ்பர்சம் மணி 12-30 மோக்ஷம் மணி 3-42 இன்று பகல் மணி 12-8க்கு மேல் போஜனம் கூடாது

210424

Printed by N Subramania Iyer at Sri Venkateswar Power Printing Works
Edited & Published by Bhagavatha Ranganathachariar Kumbakonam.